தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

வியாழக்கிழமை, 1982 மார்ச் 4.

மாசி 20, துன்மதி—திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு "

அவைக்கு அஞ்சாமல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் பொருட்டு, நெறிமுறைப்பட்ட நூல்களை எண்ணிப் பார்த்து தொடர்பு அறிந்து கற்க வேண்டும்.

(1) வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Microhydal Power Stations at Vaigai and Pykara.

* Q. 341.—THIRU P. VENKATASUBRAMANIAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

Whether schemes formulated by Government of Tamil Nadu for setting up two microhydal power stations one at Vaigai and another at Pykara have been approved by the Planning Commission ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம், மத்திய திட்டக் குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ? இவைகள் எந்தக் காலக் கட்டத்தில் வேலை செய்யத் துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வைகை அணை சிறிய நீர் மின் நிலையம் 396.5 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பெறும், 1984-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இயக்கி வைக்கப்படும். பைகாரா அணை சிறிய நீர் மின் நிலையம் 148.5 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பெறும், அதுவும் 1984-ஆம் ஆண்டு நவம்பரில் இயக்கி வைக்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சிறிய புனல் மின் நிலையங்கள் தமிழகத்திலே வேறு எங்கேனும் தொடங்க அனுமதி கேட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சிறிய நீர் மின் திட்டங்கள் என்கிற வகையில் வைகை அணையில் இரண்டு 3 மெகாவாட்டும், பைகாரா அணையிலே ஒரு 2 மெகாவாட்டும், கீழ்பவானி திட்டத்தில் இரண்டு 4 மெகாவாட்டுமாக 3 திட்டங்கள் மைய அரசினுடைய அனுமதியைப் பெற்றுள்ளன. மத்திய அரசு ஜப்பான் நாட்டின் உதவியுடன் இந்த திட்டங்களை நிறைவேற்றவும் முன்வந்துள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிக உயரமான பைப் லைன் கொண்டது சுருளி மின் நிலையத்தில் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டாவது மின் நிலையம் ஒன்றை ஏற்படுத்தினால், அதிகமான அளவில் மின்விசை உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்குமே, அதைப்பற்றி அரசு ஆலோசித்து ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பி அனுமதி பெற்றிருக்கிற இந்தத் திட்டங்களுக்கு காஸ்ட் ஆப் புரொடெக்ஷன் என்ன இருக்கும் என்பதை முதலிலேயே வொர்க்-அவுட் பண்ணியிருப்பீர்கள். இப்பொழுது உற்பத்தியாகக் கூடிய காஸ்ட் ஆப் புரொடெக்ஷனுக்கும், அங்கே உற்பத்தி பண்ணக்கூடிய காஸ்ட் ஆப் புரொடெக்ஷனுக்கும் கம்பேரிட்டிவ்லி காஸ்ட் எப்படி இருக்கிறது ? ஜாஸ்தியாக உள்ளதா ? குறைந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்தி செலவைப் பார்த்துதான் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. வைகை அணையில் ஒரு யூனிட்டுக்கு 17.5 பைசாவாகவும், பைகாரா அணையில் 16.2 காசாகவும் இருக்கும். ஆகவே சிக்கனமான, திட்டங்கள்தான்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 4]

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறிய புனல் மின் திட்டங்களை பல இடங்களில் ஏற்படுத்தப் போவதாக சில விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் அணையில் ஒரு சிறிய புனல் மின் . . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வட ஆற்காட்டுக்கும் வைகைக்கும் வெகு தூரம்.

மேல்தாம்பிரபரணி நீர்மின் திட்டம்.

*வினா எண் 342—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொராணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல கோடி ரூபாய் செலவில் மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் ?

(உ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மத்திய மின் அதிகாரக் குழுவின் அறிவுரையின் பேரில் திருத்திய திட்ட அறிக்கைக்காக மறு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) ஆய்வுப்பணிகள் முடிந்தவுடன் இத்திட்டத்தின் மதிப்பீடு தெரிய வரும்.

(ஈ) 120 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

(உ) ஆய்வுப்பணிகள் முடிந்து திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பிறகு வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொராணம் : இந்த மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே மத்திய அரசு புலி வருகிறது புலி வருகிறது என்று மாநில அரசை மிரட்டிக் கொண்டு அதற்கு வழி இல்லை என்று சொல்லிவந்தது . . .